சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 102 / 2018

பெயர் : முருகன்  (ம.சா.1)  23.08.2022

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகார்கொடுத்தேன். விபத்து நடந்த அன்றே புகார் கொடுத்துவிட்டேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள். விபத்து குட்டபப்பட்டி - குப்புரெட்டிப்பட்டி சாலை கிழமேல் சாலை மற்றும் குளித்தலை மணப்பாறை தென்வடல் சாலை இணையும் இடத்தில் நடந்தது. விபத்து நடந்த சமயத்தில் நான் குட்டபப்பட்டி - குப்புரெட்டிப்பட்டி சாலையில் மேற்கில் இருந்தது கிழக்காக இருச்சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். விபத்துநடந்த சாலை அகலமான சாலை. அப்போது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த லாரி என்மீது மோதி விபத்து ஏற்பட்டது. நான் தான் லாரி வருவதை கவனிக்காமல் கவனக்குறைவாக இருச்சக்கர வாகனத்தை ஓட்டி சென்றதால் விபத்து ஏற்றபட்டது என்றால் சரியல்ல, விபத்திற்கு முழவதும் எனது கவனக்குறைவும் அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால்சரியல்ல. 1ம் எதிர்மனுதாரிகட்ன ஓட்டுநர் சாலைவிதிகளை மதித்து கவனமாக லாரியை ஓட்டிவந்தார் என்றால்சரியல்ல. விபத்தை அந்த சாலையில் நின்றவர்கள் பார்த்தார்கள். விப்திற்கு பின்பு எனது மாமனார் என்னை குளித்தலை அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். நான் குளித்தலை அரசுமருத்துவமனையில் 1 நாள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். விபத்து பதிவேட்டை தாக்கல் செய்துள்ளேன், அதன்பிறகு முசிறி தங்கையன் மருத்துவமனையில் 1 வாரம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். 1 வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. நான் வழக்கிற்காக மருத்துவ பில் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட சொற்ப காயங்கள் முழுவதும் குணமாகிவிட்டது என்றால்சரியல்ல. போலிசாரின் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை. நான் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனம் எனக்கு சொந்தமானது. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை, எனது இருச்சக்கர வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை. எனது வயது தொழில் வருமானம் ஆகியவற்றை காட்டகூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிகஅதிகம் என்றால்சரியல்ல. அது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால்சரியல்ல. இந்த மனு தள்ளுபடி உரியது என்றால்சரியல்ல.

**ஓம் / முருகன்**

**ஓம்/ சண்முக கனி,**

**சார்பு நீதிபதி,**

**குளித்தலை.**